# கிட்னிக் கவலையை விடுங்க!

கிட்னி ட்ரான்ஸ்ப்ளான்டேஷன் என்பதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? சிறுநீரகத்தை ஒருவர் உடலிலிருந்து எடுத்து இன்னொருவர் உடலுக்கு மாற்றுவது. உடலில் இருக்கிற இரண்டு சிறுநீரகங்களும் பழுதடைந்து, அவை செயல்பட முடியாத நிலையில், நோய் முற்றியிருக்கும்போது இதுதான் சிறந்த வழி!

ஒரு வீட்டில் அப்பாவுக்குச் சிறுநீரகம் தேவை என்று வைத்துக் கொள்ளுங்கள். அம்மா, பிள்ளைகள் உட்பட உறவினர் பலர் அன்பினால் முன் வரலாம். ஆனால் அப்படி வருகிறவரிடமிருந்து சட்டென்று சிறுநீரகத்தை எடுத்து, அந்த அப்பாவுக்குப் பொருத்திவிட முடியாது. காரணம், மிக அடிப்படையாக அப்பாவுக்கும், சிறுநீரகம் கொடுக்க வருகிறவருக்கும் இரத்தப் பிரிவு பொருத்தமாக இருக்க வேண்டும். அப்போதுதான் இதுவரை, தான் வாழ்ந்த வீட்டை விட்டு வெளியேறுகிற சிறுநீரகம், புதிய இடத்துக்குப் போகும்போது, 'அந்த இடம் எனக்குப் பொருந்தவில்லை' என்று கோபித்துக் கொண்டு வெளியேறாது. இப்போது அப்பாவுக்கு கிட்னி தேவை. ஆனால் உறவினர் யாரும் கொடுக்க முடியாமல், ஒவ்வொருவருக்கும் அப்பாவுடன் பொருந்தாத இரத்தப் பிரிவு. என்ன செய்வது? வெளி ஆட்களைத் தேட வேண்டியதுதான். இரத்தம் பொருந்தி வந்து, கிட்னி கொடுக்க வருகிற வெளிநபர்களுக்குப் பதிலாக என்ன கொடுப்பது?

கிட்னி ட்ரான்ஸ்பிளான்டேஷனில் லட்சங்களில் பணம் கைமாற ஆரம்பித்தது இப்படித்தான். வியாபாரம் என்று வந்துவிட்டாலே, அந்த இடத்தில் பேச்சு வார்த்தைகளும், தரகர்களும், தகராறுகளும், தாறுமாறாக வந்துவிடும்தானே?



வஸந்த் செந்தில்

ஏழைகள் வறுமைக்காக, சிறுநீரகத்தை விற்க முன்வர, இதனை முதுகு மாற்றி விடுகிற இடைத்தரகர்கள் பணத்தில் திளைக்க ஆரம்பித்து விட்டார்கள். நம் பத்திரிகைகளில் கிட்னி கொடுத்து ஏமாந்த ஏழைகள் சட்டையைத் தூக்கிப்பிடித்துக் கொண்டு, அறுவை சிகிச்சைத் தழும்புகளைக் காண்பிக்க, விழித்த அரசாங்கம் இப்படி கிட்னி கொடுப்பதைக் கடும் சட்டங்களைக் கொண்டு கட்டுப்படுத்தியிருக்கிறது.

இப்போது சிறுநீரகம் தேவைப்படுகிற நோயாளிக்கு, உறவினர் அல்லாத யாரும் அதனைக் கொடுக்க முடியாது. அப்பாவுக்குச் சிறுநீரகம் தேவை. அதைக் கொடுக்க பொருந்தாத இரத்தப் பிரிவு. இப்போது வெளி ஆட்கள் கொடுக்க முடியாதபடி அரசாங்கத்தின் சட்டம். அப்பாவின் உயிர் இப்போது கேள்விக்குறி. இதுதான் இன்றைக்கு இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்த நோயாளிகளின் நிலை. இந்த நோயாளிகளுக்கு என்ன பதில்?

பதில், சமீபத்தில் சென்னை லீ மெரிடியன் நட்சத்திர ஓட்டலில், 'மெட்ராஸ் இன்ஸ்டிடியூட் ஆஃப் நெப்ராலஜி' நடத்திய கருத்தரங்கில் கிடைத்தது.

கருத்தரங்கை நடத்தியவர் எம்.ஐ.என்.-னின் இயக்குனர் டாக்டர் ரவிச்சந்திரன். இந்தியாவில் இருக்கும் நெப்ராலஜிஸ்டுகளில் மிக முக்கியமானவர். கருத்தரங்கில் உரையாற்றியவர்கள் ஜப்பானிலிருந்து வந்திருந்த புரபஸர் டோமா, மற்றும் புரபஸர் டனாபி. பல அமெரிக்கப் பல்கலைக் கழகங்கள் இவர்களை உலகின் மிக முக்கிய சிறுநீரகத் துறை மருத்துவர்களாகக் குறிப்பிடுகின்றன. உரை நடந்த மெரிடியனின் விசால குளிர் அறையில், சென்னையின் முக்கிய நெப்ராலஜிஸ்டுகளும், யூராலஜிஸ்டுகளும் குவிந்திருந்தனர். உடன் என் போன்ற பொடி டாக்டரும், எம்.ஐ.என். மருத்துவர்களான டாக்டர் குமார், டாக்டர் அரசமோகன் இருவரும் இருந்தார்கள்.

கூட்டத்தில் புரபஸர் டோமா மற்றும் டனாபி இருவரும் சொன்னது என்ன? "சிறுநீரகம் பழுதடைந்து கவலையில் இருக்கும் நோயாளிகளே, இனிமேல் கவலையை

விடுங்கள். கிட்னி ட்ரான்ஸ்பிளான்டேஷனில் சிறுநீரகம் கொடுக்கிறவர், வாங்குகிறவர் இருவருக்கும் இரத்தப் பிரிவு பொருந்த வேண்டும் என்ற அவசியமில்லை. பொருந்தாத இரத்தப் பிரிவினரும் சிறுநீரகம் கொடுக்கலாம்."

இதுதான் அந்தப் பதில். ஆக, நோயாளிக்கு கிட்னி கொடுக்க முன் வருகிற உறவினர் இருந்தால் மட்டும் போதும். இரத்தம் பொருந்து கிறதா இல்லையா, என்ற கவலை இல்லை. இதனால் கிட்னி வேண்டி, வெளி ஆட்களைத்



• டாக்டர்கள் - ரவிச்சந்திரன், டோமோ, டனாபி

தேடி அலைய வேண்டியதில்லை. லட்சங்கள் இல்லை. தரகர்கள் இல்லை. தவிப்புகள் இல்லை. அரசாங்கத்தின் தொல்லைகள் இல்லை.

இந்தச் செய்தியைக் கேட்டாலே, பல சிறுநீரக நோயாளிகளுக்கு டயாலிஸிஸ் செய்யாமலே மூச்சுத் திணறல் நின்றுவிடும்.

புரபஸர் டனாபி சிறிய கண்களில் பெரிய ஒளியும், அமெரிக்க உச்சரிப்பில் ஆங்கிலமு மாகப் பேசினார். புரபஸர் டோமாவிடம் ஞானத்தின் நிதானம். மேற்சொன்ன பொருந்தாத இரத்தப் பிரிவினரிடையே, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சையை இவர்கள் இருவரும் கடந்த பத்து ஆண்டுகளாக வெற்றிகரமாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். வெற்றியை ஸ்டாட்டிஸ்டிகல் ஸ்லைடுகளோடு பகிர்ந்து கொண்டார்கள்.

**எ**ப்படி இந்த முறை சாத்தியம்? அறுவை சிகிச்சை நடக்கும்போது, நோயாளியின் இரத்தத்தின் திரவப் பகுதியை, இரட்டை வடிகட்டுதல் முறையில் பிரித்தெடுக்கிறார்கள். அதனால் நோயாளியின் உடலில் இருக்கும் புதிய சிறுநீரகத்தை ஏற்க மறுக்கும் ஆன்டி பாடி என்கிற எதிர்ப்புப் பொருள்கள், மிகத் துல்லியமாக நீக்கப்படுகின்றன. திரும்ப எதிர்ப்புப் பொருள்கள் நீக்கப்பட்ட இரத்தம் மறு படியும் நோயாளியின் உடலுக்கே செலுத்தப்பட்டு, நோயாளியின் சமநிலை பாதுகாக்கப்படும். உடலில் எதிர்க்கும் பொருட்கள் இருந்தால்தானே, அது சிறுநீரகத்தை ஏற்க மறுக் கும்? நீக்கிவிட்டால்? அவ் வளவுதான், கலபம்.

அட... ரொம்ப கலபமாக இருக்கிறதே என்று யோசிக் கும்போது டாக்டர் சின்ன சாமி - யூராலஜிஸ்ட், "எப் போதும் நிபுணர்கள் பேசும் போது கலபம் போலத்தான் எல்லாமே தோன்றும்" என்று அவர்களது உழைப்பை மேன்மைப்படுத்தினார். நன்றி சொல்ல வந்த டாக் டர் ரவிச்சந்திரன், "சரியாக இரண்டு வருடங்களுக்கு முன் எனக்கு இன்றைய தேதிக்கான அப்பாயின்மென்ட்டை பேராசிரி யர் டனாபி மற்றும் டோமா கொடுத்தார்கள்" என்று சொன்ன போது பலருக்கும் வியப்பு.

கிட்னி ட்ரான்ஸ்பிளான்டேஷனில் இந்த ஜப்பான் டாக்டர்கள் செய்திருப்பது மகத்தான சாதனை. இனி சிறுநீரகம் கொடுக்க மன மிருந்தால் போதும்.

பஃபேயில் வெள்ளரித் துண்டுகளுடன், அப்பளம் கடித்துப் பார்த்த புரபஸர் டனாபி யிடம், குறுக்கில் புகுந்து சிறு உரையாடினேன். அப்போது நான் கவனமாகக் கேட்டது ஒரே ஒரு கேள்விதான்.

"ஜப்பானில் மருத்துவத்தை எந்த மொழியில் படிக்கிறீர்கள்?..."

"தாய் மொழியில்..."

அந்தச் சிறிய மண்ணில் எந்தப் பெரிய சாதனைகளும் சாத்தியம்தான்.

(தொடரும்)